# திருச்செங்கோடு இந்தி எதிர்ப்புக் கூட்டம்

(ஒரு நிருபர்)

திருச்செங்கோடு, ஜூன் 29

28-6-38 மாலை 6 மணிக்கு இவ்வூர் நாற்பதுகால் மண்டபத்தின் முன் தோழர் எம். விஸ்வநாத முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்திற்குச் சுமார் 1000 ஜனங்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தனர்.

அது சமயம் தோழர் பி. என். வரதராஜுலு அவர்கள் இந்தி எதிர்ப்பு தமிழ் கீதம் பாடினார்.

தோழர் கிருஷ்ணானந்தா அவர்கள் "இந்தியும் தமிழர் கடமையும்" என்பதுபற்றி நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்.

தலைவர் முடிவுரைக்குப்பிறகு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.